# இரட்சிப்பு மார்ச் 2025 யுனிகோடு


இரட்சிப்பு
RATCHIPPU
RATCHIPPU = SALVATION

Volume-14 March - 2025 Issue-10

Price Rs.5-00 Annual Subscription Rs.60/-


**இரட்சிப்பு மார்ச் 2025 யுனிகோடு**

## இயக்குநர் கடிதம்…

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இவ்வாண்டின் 3ம் மாதத்தைக் காண கிருபை தந்த நம் கர்த்தாதி கர்த்தருக்கு நன்றிபலி ஏறெடுப்போம். தபசு (லெந்து) காலத்தை இம்மாதம் 5ம் தேதி (சாம்பல் புதன்) தொடங்கி ஏப்ரல் 19ம் தேதி வரை ஆசரிக்கிறோம். இந்த 40 உபவாச தினங்களிலும், நேரங்களை அட்டவணைப்படுத்திக்கொண்டு உபவாசம் இருந்து ஜெபிக்கவும், சுயத்தை வெறுத்து 'தேவை' உள்ளவர்களுக்கு 'சேவை' செய்யவும், ஆலய ஆராதனைகளில் பங்குபெறவும், விசுவாசிகளோடு திருமறைத் தியானங்களில் பங்குபெறவும் அனைவருக்கும் நினைவு படுத்துகிறோம். கடவுளை கிட்டிச்சேர்வதற்கு இந்த 40 உபவாச நாட்களை பயன்படுத்திக்கொள்வோம்.

நமது ஊழிய திட்டங்களான 'ஜெப-ஜன்னல்' ஜெப நேரங்கள் (மார்ச் 14, 21, 28), 'அனைவரும்-ஊழியத்தில்' - கைபிரதி ஊழிய திட்டம், 'வேதாகம போட்டிகள்' ஆகியவற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள். தகவல் தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR CODE ஆகியவை பக்கம் 18-ல் மற்றும் நமது வலைதளத்தில் (www.ratchippu.com) தரப்பட்டுள்ளன.. தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

வேத-வரிகள்-169 யோனா 3:5

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**
அப்போது நினிவேயின் மனுஷர் பராபரனின் பேரிலே விசுவாசம் வைத்து, உபவாசத்தைக் கூறினார்கள்; பெரியோர் துவக்கி சிறியோர் மட்டும் இரட்டுகளை உடுத்திக் கொண்டார்கள்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**
அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசம் செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டு உடுத்திக் கொண்டார்கள்.

**திருவிவிலியம்; (பொது-1995)**
நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பு இருக்க முடிவு செய்தார்கள். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர்.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**
நினிவேயின் மக்கள் தேவசெய்தியை நம்பினார்கள். அவர்கள் உபவாசம் செய்து மனந்திரும்ப முடிவு செய்தனர். சிறப்பு துக்க ஆடை அணிந்து, தங்கள் மனவருத்தத்தை வெளிப்படுத்தினர்.

# ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - பிப்ரவரி 2025

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஈரான், உக்ரைன்-ரஷ்யா போர்கள் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், வங்கதேச பொருளாதாரம் சீரடைய... இஸ்ரேல்-ஹமாஸ் மற்றும் இஸ்ரேல்-ஹிஸ்புல்லா போர் நிறுத்தங்கள் மதிக்கப்பட்டு, லெபனான்-இஸ்ரேல் மற்றும் இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே அமைதி நிலவ. உக்ரைன்-ரஷ்யா போர்நிறுத்தம் குறித்த உலக நாடுகளின் கருத்து வேறுபாடுகள் நீங்க... இயற்கைப் பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்ப வர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு அரசியல்-சாசனம் மற்றும் ஜனநாயக மரபுகளை மதித்து அனைத்து தரப்பு மக்கள் நலனுக்காகவும் பாரபட்சமின்றி செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் மத-வாத பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. ஷேரன் ஹெப்சிபா, திருமதி. சுமி ஜேஸ்மின், திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) பிரி-கே.ஜி முதல் பிளஸ்-2 வரையில் கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்காக... இந்த ஆண்டு அரசு பொதுத்தேர்வுகளை எழுதும் 10, 11, 12ம் வகுப்பு மாணவர்களுக்கு தேவையான ஞானம் வழங்கப்பட...

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் ஷிஂபியா, ஷெரின் டேவிட், ஜேசன், ஜாஸ்மின், சிப்ரா, ஜாஷ்வா மேத்யூ, வில்சன், Dr.கிறிஸ்டினா, கிப்ட்சன் தங்கராஜ், ஜோயல், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) பேபி. ஜாஂபியா, திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. அருள்தாஸ், திரு. ஜெரி, திருமதி. லீலா டேவிட், திருமதி. ஜேஸ்மின் ஞானதாஸ், Rev.கருணாகரன், திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், திரு. சுந்தர்சிங், திரு. அப்பன் டேவிட், திரு. ஜூலியன், திரு. அருள்சிங் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திரு. ஜெபனேசர், திருமதி. ஜெயக்கொடி, திரு. D.மனோகர், திரு. ஹேமில்டன், திரு. யாபேஸ் சாமுவேல், திருமதி. பால், திரு. டேனியல், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், Dr.ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. மில்காள் சாம், திருமதி. ராணி சாமுவேல்ராஜ், திருமதி. ஜெயா ஆல்பர்ட், திரு. G.N.S. டேவிட், திரு. J.R. டேவிட், திருமதி. ஐரீன் வாக்கர் (கிரேஸ் திவ்யா), திருமதி. ஷைனி ஜேம்ஸ், திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. S.J.P.ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி வசந்தா துரைராஜ் ஆகியோரின் குடும்ப ஆசீர்வதங்களுக்காக...

தபசு காலம் சிறப்பு தேவசெய்தி...

லெந்து காலம்:

# சிலுவையை புரிந்துகொள்வோம்

1 கொரிந்தியர்-1:18

THE LENTEN SEASON

**CROSS: A CHRISTIAN INSIGHT**

**Rev. Samuel Selvakumar**



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இயேசு கிறிஸ்துவின் திருப்பெயராலே உங்கள் யாவரையும வாழ்த்துகிறேன். மனம் திரும்புதலுக்கான அழைப்பை பெற்றுக்கொள்ளவும், ஆண்டவர் இயேசுவின் பாடு மரணத்தைத் தியானிக்கவும், வாய்ப்பாக உள்ள லெந்து காலத்துக்காக கடவுளுக்கு நன்றி சொல்லுகின்றேன்.

லெந்து காலங்களில் சிலுவை தியானத்தை பாரம்பரியமாகக் கொண்டுள்ளோம். ஆனால், மூன்றாம் நான்காம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் சிலுவையை தங்கள் அடையாளமாக கொள்ளவில்லை. மாறாக. மீன் வடிவத்தை அடையாளமாக பயன்படுத்தினார்கள். கிரேக்கத்திலே மீன், 'இக்தூஸ்' (I-CH-TH-U-S) என்று அழைக்கப்படுகிறது. இத்துஸ் என்பதற்கு 'இயேசு கிறிஸ்து கடவுளின் மைந்தர்; எங்கள் மீட்பர்' என்பது பொருளாகும். ஆதித் திருச்சபையில் ஒரு ரகசிய கிறிஸ்தவர் இன்னொரு கிறிஸ்தவருக்கு தானும் கிறிஸ்தவர் என்பதை உணர்த்த, தரையிலே பெருவிரலாலே மீன் வடிவத்தை வரைந்து காட்டுவது பாரம்பரியம் ஆகும். கான்ஸ்டன்டைன் பேரரசரின் காலத்துக்குப் பின்னர், கிறிஸ்தவர்கள் சிலுவையை தங்கள் அடையாளமாக ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

சிலுவை குறித்த சிந்தனைகளும், தியானங்களும் சொகுசு வாழ்க்கை வாழும் அனேகருக்கு விருப்பம் இல்லாத ஒன்றாக இருக்கலாம். ஒருவேளை சிலுவை, கழுத்திலே தொங்கவிடும் அழகு சாதனமாக இருக்கலாம். சிலுவையை தவிர்த்து, ஆசீர்வாதத்தை மாத்திரம் போதிக்கிற சபைகளைத் தேடி இறைமக்கள் இன்று சென்றுகொண்டிருக்கலாம். ஆனால், ~~சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாய் இருக்கிறது; இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாய் இருக்கிறது‖ (1கொரி-1:18) என திருமறை சொல்லுகிறது. அன்றும் இன்றும், மனந்திரும்புதலையும் இரட்சிப்பையும் விரும்புகின்ற மக்களுக்கு மாற்றுறுவாக்கத்தின் கருவியாக இந்த சிலுவை அமைந்திருக்கிறது.

இரண்டு கோணங்களில் சிலுவையை நாம் புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

**கடவுள் பார்வையில் சிலுவை:**

கடவுளுடைய பார்வையிலே சிலுவை எத்தகையது? ஏன் சிலுவை தேவை?

**Cross is necessary to reveal God's evaluation of human life:**

**சிலுவை மனித வாழ்வை மதிப்பீடு செய்யும் கடவுளின் கருவி:**

கடவுள் மனித வாழ்வை எவ்வளவு உயர்வானதாக கருதுகிறார் என்பதற்கு சிலுவை ஒரு அடையாளமாக அமைந்திருக்கிறது. ஆண்டவர் இயேசு வாழ்ந்த காலத்திலே மனித உயிர்கள் மதிக்கப்படவில்லை. மனித உயிர்கள் மலிவானதாக எண்ணப்பட்டன. குழந்தைகளை பலியிடுவதும், அடிமைகளை வாங்கி விற்பதும் அதிகரித்திருந்தது. இப்படிப்பட்ட சூழலில் தான் மனித வாழ்வின் உன்னதத்தை சுட்டிக் காட்டுவதற்காக கடவுள் சிலுவையில் தன் உயிரை தியாகம் செய்தார்.

இன்றைக்கும் மனித உயிர்களை மலிவானதாக கருதுகின்ற சூழல் இருந்து கொண்டுதான் இருக்கிறது. மக்களிடையே ஏற்ற தாழ்வுகளை உருவாக்கி, மக்களைப் பிளவுபடுத்தி, அப்பாவி மக்களை கொன்;று குவித்துக் கொண்டிருக் கிறது இவ்வுலகம். ஆனால், இயேசுவின் சிலுவை மனித உயிர்களின் மாண்பு மற்றும் கடவுள் மனுக்குலத்தின்மேல் மீது கொண்டுள்ள அன்பை சுட்டிக்காட்டியது.

செஞ்சிலுவை சங்கத்தினர், சிவப்பு சிலுவையை சுமந்து கொண்டு மாளும் மனித உயிர்களை மீட்க செல்கிற காட்சியை இன்றும் நாம் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். எந்த சிலுவை உயிரை கொல்லுவதற்கு பயன்படுத்தப் பட்டதோ, அதே சிலுவை போர்க்களத்திலே மாண்டு கொண்டிருக்கிற மக்களுக்கு உயிர் கொடுக்கும் கருவியாக செஞ்சிலுவை சங்கத்தாரால் பயன்படுத்தப் படுகிறது. கடவுளின் பார்வையிலே, அன்றும் இன்றும சிலுவை ஒன்றுதான்.

## Cross is necessary to reveal god's estimation of sin:

**சிலுவை பாவத்தின் கொடூரத்தை வெளிப்படுத்துவது:**

இயேசுவின் சிலுவை பிரதான ஆசாரியர், பரிசேயர், வேதபாரகர், ஏரோது, பிலாத்து, ஆகியேரின் கொடூர பாவங்களை வெட்ட வெளிச்சம் போட்டுக் காட்டியது. பாவம்தான் இயேசுவை காரித் துப்பியது. பாவம் தான் இயேசுவை தலையில் குட்டியது. பாவம் தான் அவருடைய தலையிலே முள்முடியை சூட்டினது. பாவம் தான் அவரை வாரினால் அடித்து. துடிக்க துடிக்க ஆணிகளை கடாவி சிலுவையில் அறைந்தது. இயேசுவை சிலுவையில் அறைந்தவர்கள் எப்படி தாங்கள் செய்த பாவத்திற்கு பல்வேறு விளக்கங்களை கொடுத்தார்களோ, அதே விளக்கங்களை நாமும் இன்று நம் பாவங்களுக்கு கொடுக்கிறோம். தெரியாமல் செய்து விட்டோம், எங்கள் பலவீனம், எங்கள் பழக்க வழக்கம் என்கிறோம். நாம் என்ன நியாயம் கற்பித்தாலும் பாவம் கொடூரமானதுதான். நாம் செய்கிற பாவங்கள் நம்மை மாத்திரமின்றி அநேகரைப் பாதிக்கிறது.

அன்று, பாவமற்ற கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். இன்றைக்கும் அநேகம் அப்பாவிகள் கொல்லப்படுகிறதை நாம் பார்க்கிறோம். இவர்களும் இயேசுக்களே. தெரிந்தோ தெரியாமலோ வாய் மூடி, மவுனமாய் இருக்கிற நாமும் அதற்கு ஒரு காரணமாய் இருக்கிறோம். அன்றைக்கு ஒரு சிலரின் பாவம் இயேசுவை சிலுவையில் அடித்தது என்று சொல்கின்ற நமது பவங்கள், இன்று அனேகர் கொல்லப்படுவதற்கு காரணமாய் இருபப்பதை நாம் உணராதிருக்கிறோம்.

## Cross is necessary to understand the attributes of god's:

**சிலுவை கடவுளின் குணாதிசயங்களை நாம் புரிந்துகொள்ள உதவும் சாதனம்:**

1யோவ-4:8ல், கடவுள் அன்பாயிருக்கிறார் என்று நம் வாசிக்கிறோம். கடவுள் தமது ஒரே மகனை அனுப்பி அவருடைய ஜீவனை நமக்கென கொடுத்ததன் வழியாக அவர் நம் மீது அன்பாய் இருக்கிறார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. நாம் பாவிகளாயிருக்கையிலேயே

கிறிஸ்து நமக்காக மரித்தார். நாம் மனம் மாறுவோமோ? மாட்டோமோ? என்பதுகூட அவருக்கு தெரியாது. ஆனாலும் கிறிஸ்து நமக்காக மரித்தார்.

தாய் அன்புள்ளவள் என்பதை நாம் எப்படி சொல்லுகிறோம்? தன்னுடைய உதிரத்தால் நமக்கு உயிர் கொடுக்கிறார். பிறந்த பிறகும் தமது உதிரத்தையே அமுதாக ஊட்டுகிறார். எனவே தாய் அன்புள்ளவள். ஆண்டவர் அன்புள்ளவர் ஏனென்றால் தன்னுடைய உயிரையே நமக்காக சிலுவையில் கொடுத்தார். இந்த சிலுவை இல்லாமல் இந்த அன்பின் ஆழத்தை நம்மால் புரிந்து கொண்டிருக்கவே முடியாது.

**மனிதர் பார்வையில் சிலுவை:**

மனிதருடைய பார்வையிலே சிலுவைஎத்தகையது? ஏன் சிலுவை தேவை?

**Cross is a challenge or a counter argument before our Sinful hearts:**

**சிலுவை நம் பாவமுள்ள இருதயத்தைக் கேள்வி கேட்கும் சக்தி:**

சுிலுவை என்று ஒன்று இல்லாதிருந்தால் நம்முடைய பாவத்திற்கு எதிர் கேள்வி என்றே ஒன்று இருந்திருக்காது. ஆண்டவருடைய சிலுவை என்று ஒன்று இல்லாமல் இருந்திருந்தால் நாம் இன்னும் பாவத்திலேயே மூழ்கி போயிருந்திருப்போம். இந்த சிலுவைதான் நம்மையும் நம்முடைய நடத்தையையும், நம்முடைய சிந்தனையையும், நம்முடைய வாழ்வு முறையையும் எதிர்த்து கேள்வி கேட்கிறது. எனவே, சிலுவை மனிதருக்கு அவசியமான ஒன்றாகும்.

இயேசு கொலை செய்யப்பட்டார், இயேசுவின் சீடர்கள் கொலை செய்யப்பட்டனர், கோடிக்கணக்காக ரத்தசாட்சிகள் கொல்லப்பட்டனர். இன்றைக்கும் அநியாயமாய் கொல்லப்படுகிற குழந்தைகள், எளியோர்கள், ஏழை விவசாயிகள், ஏழைத் தொழிலாளர்கள் ஏராளம் ஏராளம். இத்தகைய அநீதிகள் நடந்து கொண்டிருக்கும் போது இவற்றை குறித்து எந்த சிந்தனையும் இல்லாமல் இருக்கிறாயே? இந்த கொலைகள், இந்த அநீதியெல்லாம் உன் கண்களுக்குத் தெரியவில்லையா? அதுகுறித்து உனக்கு அக்கறையே இல்லையா? இது நியாயமா? என்ற கேள்விகளை சிலுவைதான் நமக்கு முன் வைக்கிறது. இந்த கேள்வியை கேட்கக்கூடிய தகுதி சிலுவைக்கு மட்டுமே உண்டு.

நீங்கள் பக்தி என்று சொல்லி எதை எதையோ செய்து கொண்டிருக்கிறீர்கள். நான் உண்டு என் வேலை உண்டு, நான் உண்டு என் குடும்பம் உண்டு, நான் உண்டு என் சபை உண்டு, என்று போலியான பயனற்ற பக்தியை கொண்டாடிக் கொண்டிருக்கிற உங்களுடைய பக்தி குறைவுள்ளது அது போலியானது என்று சிலுவை சொல்லுகிறது.

நல்ல சமாரியன் நிகழ்வும் அதைத்தான் நமக்கு கற்பிக்கின்றது. ஒருவன் குற்றுயிராக கிடக்கிறபோது பக்தி வேடம் அணிந்தோர் பக்கமாய் விலகிப் போயினர்; தீண்டத்தகாதவர் எனப் பட்ட சமாரியன்தான் அவருடைய காயங்களுக்கு மருந்து கொடுத்தார். எனவே, கடவுள் பக்தியை காரணம் காட்டி கூட மனிதருக்கு செய்ய வேண்டிய நன்மையை நாம் செய்யாமல் இருக்கக் கூடாது. இயேசு நமக்காகச் சிலுவையில் மரித்து நமக்காக இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறாரே, நாமும் பிறருக்காக வாழ வேண்டாமா? எனவே, நமக்கிருக்கும் தனிப்பட்ட பாரங்கள், உடலளவிலான உபாதைகள், சோர்வுகள் பயங்கள், கலக்கங்கள் எல்லாம்வற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு நமக்கானவைகளை அல்லாமல் பிறருக்கானவை களை நோக்கத் தொடங்குவோம். ஏனென்றால் நமக்கு முன்பாக எப்போதும் நின்று கொண்டிருக்கும் சிலுவையின் கேள்விகள் தடைகளைத் தகர்த்து போடுகின்றன.

**Cross is the only instrument that has power to transform our life:**

**சிலுவை நம் வாழ்வை மாற்றக்கூடிய வல்லமையை பெற்றிருக்கிறது:**

ஆண்டவர் இவ்வுலகில் பிறக்காமல் இருந்திருந்தால், அவர் சிலுவையில் மரித்து உயிரோடு எழும்பாமல் இருந்திருந்தால், நிச்சயம் கிறிஸ்தவமும் இருந்திருக்காது. கிறித்தவம் இல்லாது போயிருந்தால் ஆண்டவருடைய அன்பை நம்மால் புரிந்து கொண்டிருக்க முடியாது. இப்போது. நூம் சிறிதளவாவது நம்முடைய பாவ வாழ்வை விட்டு மாறி இருக்கிறோம் என்றால், அதற்கு ஒரே ஒரு காரணம் இயேசுவின் சிலுவையே. சிலுவை அனேக கோடிக்கணக்கான மக்களை மாற்றி லட்சக்கணக்கான ஊழியக்காரர்களை உருவாக்கி இருக்கிறது. நம்மையும் மாற்றுவதற்கு ஆண்டவர் தெரிந்து கொண்ட ஒரே வழி சிலுவை வழிதான். இன்றைக்கு நம்மை மாற்றி நம்மை தியாக வாழ்வுக்கு அழைத்துச் செல்ல சிலுவையால் மாத்திரமே முடியும்.

இரண்டு கோணங்களிலே சிலுவை குறித்து நாம் தியானத்து இருக்கிறோம்.

முதலாவது கோணம் கடவுளுடைய பார்வையிலே சிலுவை எத்தகையது? ஏன் அவசியமானது? என்பது.

இரண்டாவது கோணம், மனிதர்களுடைய பார்வையிலே சிலுவைஏ எத்தகையது? ஏன் அவசியமானது? என்பது.

இவ்விரண்டும் இந்த லெந்து காலங்களிலே நம்மை வழி நடத்துகிற புதிய கண்ணோட்டங்களாக அமைந்திட நான் உங்களை வாழ்த்துகிறேன். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக

அருட்திரு. சாமுவேல் செல்வகுமார், ஆயர் மற்றும் தலைவர்,
சி.எஸ்.ஐ. பாலவாக்கம் குருசேகரம் (சென்னைப் பேராயம்),
திருவள்ளூர் மாவட்டம், தென்னிந்தியா.

==========================================================================

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

**Good Tidings Bible-Prints Ministries**

# ‘நல்ல விதைகள்’ சுவிசேஷ கைப்பிரதிகள்

‘GOOD SEEDS’ GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். SONSOR செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

**அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்**
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா

.==========================================================================

வேத ஆராய்ச்சி

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-94 எப்பிசோடு-94

AUTHOR: REV.DR. D. SURESH RAJAN

**சங்கீதம்:(வசனங்கள்: 1-7, 14-15, 22-23)**

1. நீதியைச் சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தாவே, நீதியைச் சரிக்கட்டுகிற தேவனே, பிரகாசியும்.
2. பூமியின் நியாயாதிபதியே, நீர் எழுந்து, பெருமைக் காரருக்குப் பதிலளியும். 3. கர்த்தாவே,
துன்மார்க்கர் எதுவரைக்கும் மகிழ்ந்து, துன்மார்க்கர் எதுவரைக்கும் களிகூர்ந்திருப்பார்கள்? 4.
எதுவரைக்கும் அக்கிரமக் காரரர் யாவரும் வாயாடி, கடினமாய்ப் பேசி, பெருமைபாராட்டுவார்கள்?
5. கர்த்தாவே, அவர்கள் உமது ஜனத்தை நொறுக்கி, உமது சுதந்தரத்தை ஒடுக்குகிறார்கள். 6.
விதவையையும் பரதேசியையும் கொன்று, திக்கற்ற பிள்ளை களைக் கொலைசெய்து, 7. கர்த்தர்
பாரார், யாக்கோபின் தேவன் கவனியார் என்று சொல்லுகிறார்கள். 14. கர்த்தர் தம்முடைய
ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார். 15. நியாயம்
நீதியினிடமாகத் திரும்பும்; செம்மையான இருதயத்தார் யாவரும் அதைப் பின்பற்றுவார்கள 22.
கர்த்தரோ எனக்கு அடைக்கலமும், என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலையுமாயிருக்கிறார்.
23. அவர்களுடைய அக்கிரமத்தை அவர்கள்மேல் திருப்பி, அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம்
அவர்களைச் சங்கரிப்பார்; நம்முடைய தேவனாகிய கர்த்தரே அவர்களைச் சங்கரிப்பார்.

**முன்னுரை:**

இந்த சங்கீதம் தாவீது மன்னரால் எழுதப்பட்ட ஒரு பிரார்த்தனைப் பாடலாகும். நீதிமான் களுக்கான ஆண்டவரின் நீதியையும், துன்புறுவோருக்கான அவரது ஆறுதலையும், தீயோருக்கு எதிரான அவரது தண்டனையையும் இது வலியுறுத்திச் சொல்லுகிறது.

**1. ஆண்டவரின் நீதியை அறிந்துகொள்ளுதல் (வச:1-7)**

அநீதி நிறைந்த உலகத்தில் நாம் வாழ்கின்றோம். கையூட்டு இல்லாமல் எதையும் சாதிக்க கூடாது என்ற அளவிற்கு சங்கடம் நிறைந்த ஓர் சமுதாயத்தில் நாம் வாழ்கின்றோம். தீயவர்கள் எங்கும் பெருகியிருக்கிறார்கள். ‘அவர்கள் இறுமாப்புடன் பேசுகின்றனர்: தீமைசெய்வோர் அனைவரும் வீம்பு பேசுகின்றனர். ஆண்டவரே’ அவர்கள் உம் மக்களை நசுக்குகின்றனர்: உமது உரிமைச் சொத்தான அவர்களை ஒடுக்குகின்றனர். கைம்பெண்டிரையும் அன்னியரையும் அவர்கள் வெட்டி வீழ்த்துகின்றனர்: திக்கற்றோரை அவர்கள் கொலை செய்கின்றனர்’ (வச 4-6) என்று பாடலாசிரியர் இங்கு கதறுகிறார்.

நாமும் இத்தகைய குமுறுதலோடு பல நேரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்பகுதியில் ஆண்டவரை நீதியின் தீர்ப்பாளராகப் பார்க்க முடிகிறது. நாம் நாம் வேதனை வாழ்வு வாழ்ந்து

கொண்டிருந்தாலும்,. ‘அநீதிக்குப் பழிவாங்கும் இறைவா! ஆண்டவரே! அநீதிக்குப் பழிவாங்கும் இறைவா, ஒளிர்ந்திடும்! உலகின் நீதி பதியே, எழுந்தருளும்: செருக்குற்றோர்க்கு உரியதான தண்டனையை அளியும். எத்துணைக் காலம், ஆண்டவரே! எத்துணைக் காலம் பொல்லார் அக்களிப்பர்?’ (வச 1-3) என்று சங்கீதக்காரர் கடவுள் மேல் தமக்குள்ள நம்பிக்கையை வெளிப் படுத்தி இறைவனை மகிமைப்படுத்துவது நமக்கு ஆறுதல்அளிப்பதாக இருக்கிறது அல்லவா?.

நாமும் நமது வேதனையின் காலங்களில் ஆண்டவரின் நீதியை நம்பி அவரை அண்டிக்கொள்வோம்.

**2. ஆண்டவருடைய அறிவை உணர்தல் (வச:8-11)**

ஆண்டவர் அனைத்தையும் அறிந்தவர். பல சமயங்களில் இதை உணராதவர் களாக கடவுளுக்கு கண்ணில்லையா என்றெல்லாம் நாம் பிதற்றிவிடுகிறோம். ‘மக்களிடையே அறிவிலிகளாய் இருப்போரே, உணருங்கள்: மதிகேடரே, எப்பொழுது நீங்கள் அறிவு பெறுவீர்கள்? செவியைப் பொருத்தியவர் கேளாதிருப்பாரோ கண்ணை உருவாக்கியவர் காணாதிருப்பாரோ? மக்கள் இனங்களைக் கண்டிப்பவர், மானிடருக்கு அறிவூட்டுபவர் தண்டியாமல் இருப்பாரோ? மானிடரின் எண்ணங்கள் வீணானவை: இதனை ஆண்டவர் அறிவார்’ என்று இப்பகுதியில் பாடலாசிரியர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஆகவே ஆண்டவர் அனைத்தையும் அறிந்தவர் என்ற அறிவை நாம் அடையவேண்டும்.

**3. ஆண்டவரின் உரிமைச் சொத்து (வச:12-14)**

‘ஆண்டவரே! நீர் கண்டித்து உம் திருச்சட்டத்தைப் பயிற்றுவிக்கும் மனிதர் பேறுபெற்றோர்: அவர்களின் துன்ப நாள்களில் அவர்களுக்கு அமைதி அளிப்பீர். பொல்லார்க்குக் குழி வெட்டப் படும்வரை ஆண்டவர் தம் மக்களைத் தள்ளிவிடார்: தம் உரிமைச் சொத்தாம் அவர்களைக் கைவிடார்’. நாம் ஆண்டவருக்கு உரித்தானவர்கள், அவரது உரிமைச் சொத்து என்பதை என்றும் உணரவேண்டும். நாம் அவருக்கு சொந்தமானதால் அவர் நம்மை என்றும் கை விடுவதில்லை. அவர் நம்மை கண்டிக்கிறார், நமக்கு அமைதியளிக்கிறார், அன்பு காட்டி அரவனைக்கிறார். நம்மை என்றும் கை விடமாட்டார் என்பதை இப்பகுதியில் நாம் தெளிவாகக் காண்கிறோம்.

**முடிவுரை:**

அன்புக்குறியோரே! வாழ்வின் சூழ்நிலையில் வேதனையின் வரம்பில் நின்றுகொண்டிடிருக்கும் உங்களுக்கு இது ஒரு அற்புதமான புத்தெழுச்சி கொடுக்கும் பாடலாகும்.. ‘தீர்ப்பு வழங்கும் முறையில் மீண்டும் நீதி நிலவும்: நேரிய மனத்தினர் அதன்வழி நடப்பர்’ (வச-15) என்ற அறிவுரைப்படி நேரிய மனத்தினாராய் நாம் வாழ்ந்து இறைவனை கணப்படுத்துவோம்.

ஆண்டவரின் ஆசி உங்களோடிருப்பதாக.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,இணை நிறுவனர்,
வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

==========================================================================

# வேதாகம போட்டி-172 (பிப்ரவரி-2025)

## சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) அன்பு சுதந்திரம் (திலி)
4) ஏஞ்சல் C. (திலி)
5) ஏஞ்சல் டார்வின் (கன்)
6) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
9) அன்னாள் ஜெபக்கனி (கோய)
10) அனி பாய் ஜான் (திலி)
11) அனிதா ஜான் (கோய)
12) அரோமா சாத்ராக் (திலி)
13) அருள்செல்வி (விரு)
14) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
15) அசோக் குமார் பிரின்ஸ் (தூத்)
16) பெல்சி தங்கராஜ் (சென்)
17) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
18) பியூலா ஜேசுராஜன் (பாண்)
19) பியூலா ராஜசெல்வன் (கோய)
20) செலினா பென்சி வில்சன் னச. (குவை)
21) செலினா வின்சென்ட் (திலி)
22) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
23) சந்திரலேகா (ஆபி)
24) சந்திரா மேரி விஜயன் (பெங்)
25) சந்திரா சாமுவேல் (திலி)
26) சார்லஸ் ஃபின்னி Dr. (சென்)
27) சார்லஸ் சாலமோன் Gp.Capt. IAF (புனே)
28) சார்லட் டேவிட் (சென்)
29) சித்ரா பெஞ்சமின் (திளு)
30) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
31) கிறிதுதாஸ் D. (ஈரோ)
32) கிறிஸ்டி ஆயீட்டஸ் (திலி)
33) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
34) கிறிஸ்டி ஜேம்ஸ் (மாய)
35) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
36) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
37) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
38) சிந்தி ஜோஷ்வா (தஞ்)
39) டெய்ஸி பில்பா (மும்)
40) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
41) டெய்ஸி சாம் (ஆபி)
42) டேனியல் தாமஸ் (திலி)
43) டேனிங் சொர்ணா ஜெஸ் (திலி)
44) டேவிட் ஜே.ஆர். (சென்/கோய)
45) தெபோராள் ஆனந்தமணி (தூத்)
46) தெபோராள் D. (சென்)
47) தேவநேசம் ராஜாசிங் (சென்)
48) டோராபாய் (சென்)
49) எபநேசர் கிரேஸ்லின் சாந்தி (திலி)
50) எலிசபெத் செல்லத்துரை (சென்)
51) எமிமாள் மில்டன் (சென்)
52) எமிமாள் சாமுவேல் ஜெஸிக்கா(மது)
53) எப்சிபா ஜாண் (ராணி)
54) எஸ்தர். டி.ஆர். (திலி)
55) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
56) ஃபிரீடா லிவிங்ஸ்டன் (காஞ்)
57) குளோரி ரவீந்திரன் (திலி)
58) ஞானம் ஜெபராஜ் (திலி)
59) ஞானம் பிலிப் (கோய)
60) ஞானராணி G. (சென்)
61) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
62) கோல்டா ஜேசுபாதம் (மும்)
63) கிரேஸ் டேனி (தென்)
64) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
65) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
66) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
67) கிரேனா அன்புரோஸ் (சென்)
68) கிரேஸியா ஜெயபால் (சென்)
69) கிரிசெல்டா செய்லர் (சென்)
70) குணவதி ஜெபமணி (சென்)

71) ஹெலென் ஜான்சிராணி (திலி)
72 ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
73) ஹெலென் ஜீவன் தாஸ் (திலி)
74) ஹெலென் I. (திளு)
75) ஹெலன் திலக் (தூத்)
76) ஹேமா அஜீத் (சென்)
77) ஹேமா கேப்ரியேல் (பெங்)
78) ஹெப்சி அசரியா (பாண்)
79) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
80) இளவரசி ஜோபிதா (கோய)
81) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
82) இந்திரா கெத்ஸி டேவிட் Dr. (திலி)
83) ஜமீலா செல்வராஜ் (சென்)
84) ஜமுனா கே. (சென்)
85) ஜேன் தர்மராஜ் (திலி)
86) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
87) ஜான்ஸி சந்தியா (திலி)
88) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
89) ஜெபா ஜெயராஜ் (சென்)
90) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
91) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
92) ஜெபசீலி கிளின்டன் (சென்)
93) ஜெபா சீனி (திலி)
94) ஜீவா டேவிட் சாலோமோன் (தென்)
95) ஜெமீலா நிக்ஸன் (சென்)
96) ஜெனிலா (சென்)
97) ஜென்ஸி ஞானேஷ் (மும்)
98) ஜெனித்தா செல்வின் (திலி)
99) ஜெரின் ஸ்டீபன் (மும்)
100) ஜெஸி செல்லத்துரை (கோய)
101) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
102) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
103) ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
104) ஜெயந்தி ஹேனா (அரி)
105) ஜெயசெல்வி முத்துராமன் (திலி)
106) ஜோனா ஸடீபன் (சென்)
107) ஜோஸ்பின் ஜெஸி (சென்)
108) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
109) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
110) ஜூலியட் ஜெபா (சென்)
111) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
112) கலையரசி செல்வராஜ் (சென்)
113) கஸ்தூரி எலியாஸ் (திலி)
114) கிருபாவதி S. (சென்)
115) கோயில்பிள்ளை ஞானத்தாய்(தென்)
116) லதா மைகேல்ராஜ் (சென்)
117) லீலா டேவிட் (சென்)
118) லீலா ஜோஸப் (கோய)
119) லில்லி ஜாண்ஸன் (சென்)
120) லிஸி டென்சிங் (திலி)
121) மலர்விழி சாம்சன் (திளு)
122) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
123) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா)(ஜெய)
124) மல்லிகா V. (சென்)
125) மரிய பாப்பா (சென்)
126) மரியாள் ஜே.எஸ். (தூத்)
127) மேபல் கிறிஸ்டியான் (சென்)
128) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
129) மெர்சிபா (கோய)
130) மெர்சி ஃபுளோரா பாஸ்கரன் (வேலூ)
131) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
132) மெர்லின் சாமுவேல் (சென்)
133) மில்காள் சாம் (சென்)
134) நேச மாலா பீட்டர் (திலி)
135) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
136) நகோமி J. (திசி)
137) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
138) ஒலிவியா லேங்டன் (திசி)
139) பத்மரதி ஜஸ்டின் (அமெ)
140) பாக்யபாய் ஆரோன் (திலி)
141) பமீலா எட்வின் (கன்)
142) பெர்சி பால் பொன்சிங் (தூத்)
143) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
144) பொன்மணி உத்தமசிங் (தூத்)
145) பிரேமா ஜானி (தென்)
146) பிரேமா ஸ்டாலின் (சென்)
147) பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
148) பிரின்ஸ் தயாநிதி (சென்)

149) பிரின்ஸில்லா டேனியல் (சென்)
150) பிரின்ஸ்லின் ஷைனி (தென்)
151) பிரிசில்லா தாஸ் (சென்)
152) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
153) ரேச்சல் ஈஸ்டர் (வேலூ)
154) ரேச்சல் கனகராஜ் (கோய)
155) ராஜபிரமீளா (திதூ)
156) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
157) ரமோலா அதிசயராஜ் (திலி)
158) ராணி பிரபாகர் (திலி)
159) ராணி சாமுவேல்ராஜ் (சென்)
160) ரத்னா டென்னிசன் (சவு)
161) ரோஸி ஸ்டீபன் (சென்)
162) ரூபவதி நோபிள் (திலி)
163) ரூத் ஜாண்ஸன் (திலி)
164) ரூத் நரேஷ் (சென்)
165) சலோமி மனோகர் Dr. (சென்)
166) சங்கீதா ஜெனிஸ் (திலி)
167) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
168) சாரா பாலசிங் (மது)
169) சரோஜா செல்வராஜ் (சென்)
170) சரோஜினி எலிசபெத் (சென்)
171) செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
172) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
173) செல்வராஜ் K. (கோய)
174) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
175) செல்வி அமிர்தராஜ் (திளு)
176) செல்வி S. (சென்)
177) செல்வின் S. (தூத்)
178) ஷாலி எடிசன் (சென்)
179) சாந்தி ஆல்பர்ட் (தென்)
180) சாந்தி ஜெயசீலன் (சென்)
181) சாந்தி ரோஸ் (கோய)
182) ஷர்மிளா செல்வராஜ் Dr. (கட)
183) ஷீலா G. (செங்)
184) ஷீலா இஸ்ரேல் (திசி)
185) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
186) சவுந்;தரம் சாலமோன் (சென்)
187) ஸ்டெல்லா டேவிட் (தூத்)
188) ஸ்டெல்லா கனகராஜ் (சென்)
189) ஸ்டெல்லா சூசைய்யா (தூத்)
190) சுகிர்தா சின்னதுரை (திலி)
191) சுஜாதா சாமுவேல் (சென்)
192) சுமித்ரா B. (சென்)
193) சுந்தரிபாய் (தூத்)
194) சுசீலா தியோடர் (திசி)
195) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
196) தனசீலி ஞானராஜ் (சென்)
197) தெல்மா ஸ்டேன்லி (மது)
198) உமா குளோரி (சென்)
199) உஷா ஜெபராணி (திளு)
200) வனஜா ஹெர்பர்ட் (திலி)
201) வசந்தா அன்பன் (திலி)
202) வசந்தா சந்திரசேகர் (கோய)
203) வசந்தா சேகர் (சென்)
204) வசந்தா துரைராஜ் (ஊஎப்டி)(திசி)
205) வசந்தி கருணாகரன் (சென்)
206) வசந்தி வாசன் (சென்)
207) விஜயராணி A. (சென்)
208) விஜி டேனியல் (செங்)
209) விமலா ஜெயக்குமார் (தூத்)
210) விண்ணரசி ரோஸ் (சென்)
211) வினோலியா பால் (மது)
212) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
213) வினோலியா வில்சன் (திதூ)
214) வைலட் கிறிஸ்டோபர் (திலி)

## வேதாகம போட்டி-172 சரியான விடைகள் (எண்ணாகமம்)

1. முப்பது நாள் எண்:-20:29
2. செலோப்பியாத் எண்:-27:1, 36:11, 26:33
3. ஓபா எண்:-10:29
4. சீனாய் வனாந்திரம் எண்:-1:19
5. பினகாஸ் எண்:-25:7,8
6. ஆறு எண்:-35:13-15
7. மோசே எண்:-12:13
8. யோசுவா எண்:-13:16
9. சரி - எண்:-10:8
10. சரி - எண்:-12:10
11. தவறு - எண்:-23:19
12. தவறு - எண்:-19:22
13. ஈ - கோகாத் புத்திரர் எண்:-4:4
14. ஆ - முத்து எண்:-11:7
15. ஆ - மன்னா எண்:-11:9
16. ஈ - பாத்திரங்கள் எண்:-19:15
17. லேவியர் எண்:-8:24-26
18. பூரிகைகள் எண்:-10:2-9
19. திராட்சை எண்:-6:2-4
20. மேகம் எண்:-9:17-22

---

# 'அனைவரும் ஊழியத்தில்'

### ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

### இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. இத்திட்டத்தில் பங்குபெற, உங்கள் தபால் முகவரியை கடிதம் அல்லது வாடஸ்-அப்- மூலம் எமக்கு அனுப்பவேண்டும். (எமது முகவரி - வாட்ஸ்-ஆப் எண் பக்கம்-18ல்).

2. முகவரி கிடைத்தவுடன் தங்களுக்கு 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், குப்பை-வண்டிக்காரர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். கைப்பிரதிகளை வெளியூரில் வாழும் இயேசுவை அறியாத உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தபால்-உறையில் அனுப்பி வைக்கலாம்.

3. கைப்பிரதிகள் தீர்ந்தவுடன் விருப்பம் தெரிவித்தால் மீண்டும் 30-கைப்பிரதிகளை உங்களுக்கு அனுப்பிவைப்போம். இத்திட்டத்தில் இணைந்து நற்செய்தி பரவ உதவுங்கள்.

கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இக்கைப்பிரதிகளை வழங்குவதைத் தவிர்க்கவும்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

# வேதாகம போட்டி-173

## போட்டி எண்:173 (மார்ச் -2025) வேத-பகுதி: உபாகமம்

தொகுப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

### வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-03-2025

1. அவர்கள் சகோதரருக்குள்ளே அவர்களுக்கு சுதந்தரமில்லை: யாருக்கு?
2. 120 வயதிலும், கண் இருளடையவில்லை, பெலன் குறையவில்லை - யாருக்கு?
3. ஆரோன் மரித்தபின் அவன் ஸ்தானத்தில் ஆசாரியனானது யார்?
4. திரளானவர்களும் ஏனாக்கியரைப்போல நெடியவர்களுமான பலத்த ஜனங்கள் யார்?
5. 70பேராய் எகிப்துக்கு போனவர்களை கர்த்தர் திரட்சியில் எதைப்போல் ஆக்கினார்?
6. தேவனாகிய கர்த்தருக்கு உண்டாக்கும் பலிபீடத்தண்டை எதை உண்டாக்க கூடாது?
7. சாவுக்கு பாத்திரமானவன் எத்தனை சாட்சியின் வாக்கால் கொலைசெய்யப்பட வேணும்?
8. 'கர்த்தருக்கு பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்' யார் இவன்?
9. 'பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக' - **சரியா தவறா**?
10. 'மோசே மரிக்கிறபோது நூற்றிருபத்தாறு வயதாயிருந்தான்' - **சரியா தவறா**?
11. 'போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக' - **சரியா தவறா**?
12. 'இஸ்ரவேலின் குமாரத்திகளில் ஒருத்தியும் வேசியாயிருக்கக்கூடாது' - **சரியா தவறா**?
13. சீதோனியர் '**இதை**' சீரியோன் என்கிறார்கள்; எமோரியரோ அதைச் சேனீர் என்கிறார்கள்:
அ) எர்மோனை ஆ) சீயோனை இ) ஓரேபை ஈ) யோர்தானை
14. கண்ட இடமெல்லாம் நீ '**இதை**' இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு:
அ) பலியை ஆ) போஜன பலி இ) பான பலி ஈ) சர்வாங்க தகன பலி
15. உன் பையில் பெரிதும் சிறிதுமான பலவித '**இவைகளை**' வைத்திருக்கவேண்டாம்:
அ) குச்சிகளை ஆ) அளவைகளை இ) நிறைகற்களை ஈ) உருளைகளை
16. மோசே நேபோ மலையிலிருக்கும் '**இதன்**' கொடுமுடியில் ஏறினான்:
அ) சீனாயின் ஆ) பிஸ்காவின் இ) கெரிசீம் ஈ) ஏபாலின்
17. உண்ண வேண்டாம், உண்ண வேண்டாம்! 'உயிரின்-உயிர்' இதை உண்ண வேண்டாம்! வாழ்ந்திருக்க இதை உண்ண வேண்டாம்! வளம்-பெருக இதை உண்ண வேண்டாம்! தண்ணீர் போல் ஊற்ற வெண்டும்! தரை மீதில் ஊற்ற வேண்டும்! **இது என்ன?**
18. பதித்திடு, பதித்திடு மனதில் பதித்திடு! கட்டிடு, கட்டிடு கைகளில் கட்டிடு!
பேசிடு, பேசிடு பொழுதும் பேசிடு! குறியிடு, குறியிடு நெற்றியில் குறியிடு!
எழுதிடு, எழுதிடு வாசலில் எழுதிடு! **எதை? இது எதை?**
19. நதியின் அக்கரையில் நாச-மலை நேச-மலை! கானான் குடியிருப்பில்; கசப்பு-மலை கனிவு-மலை! 'மோரே' சமவெளியில் மோச-மலை பாச-மலை! **மலைகள் எவை?**
20. அருவருப்பு இது அருவருப்பு, ஆண்டவருக்கு இது அருவருப்பு!
அவங்க 'டிரஸ்'ஸை இவங்க அணிந்தா அருவருப்பு!
இவங்க 'டிரஸ்'ஸை அவங்க அணிந்தா அருவருப்பு! **அவங்க யார்? இவங்க யார்?**

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

==========================================================================================

## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

பாகம்-70 எப்பிசோடு-70



# நீதிபரர்

THE RIGHTEOUS LORD

**“யாவே சாடீய்க்”**

Yah'weh Tsaddiyq

கர்த்தாவே, நீர் நீதிபரர், உமது நியாயத்தீர்ப்புகள் செம்மையானவைகள்.

சங்-119:137

Righteous art thou, O Lord, and upright are thy judgments.
Psa-119:137

நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய்கிற சிலுவைநாதரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு சாம்பல் புதன் கிருபையின் நல்வாழ்த்துக்கள்!

**ஏசா-11:5** நீதி உமக்கு அரைக்கட்டும், சத்தியம் உமக்கு இடைக்கச்சையுமாய் இருப்பதால் உம்மைத் துதிக்கிறோம் நீதிபரரே.

**யோவா-5:22** அன்றியும் பிதாவை கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்குக் கொடுத்திருக்கிறார்; ஏன்? எதற்கு?
தமது கரத்தினால் உருவாக்கப்பட்ட மனிதரின் குற்றங்களை மன்னிக்க, நீதிபரரான தமது குமாரனை பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் என்ன செய்வார்?

**2சாமு-23:3** நீதிபரராய் மனுஷரை ஆண்டுகொண்டு, தெய்வபயமாய் துரைத்தனம் பண்ணுவார். ஆதலால் இந்தியாவில் நடப்பது என்ன?

**ஏசா-45:24** இயேசு கிறிஸ்துவிடம் மாத்திரமே நீதியும், ஆளுகையும் உண்டென்று இந்திய மக்கள் தங்கள் வாயினால் அறிக்கைசெய்து, சிலுவைநாதரிடம் வந்து சேருவார்கள். சுவிசேஷத்திற்கு எதிரானவர்கள் வெட்கப்பட்டுப்போவார்கள்.

**ஏசா-11:4** இந்தியாவில் சுவிசேஷத்தைத் தடைசெய்ய எத்தனிக்கிற துஷ்ட ஆமான்களை நீதிபரர் தம் வசனத்தால் அடித்து, பெண்பிள்ளைகளை கடத்தி விற்பனை செய்கிற துன்மார்க்கரை தமது சுவாசத்தால் சங்கரிப்பார்.

**ஜெபம்:** நீதிபரரே, எங்கள் இரட்சகரே! உம்மையன்றி வேறே தெய்வம் இல்லை (ஏசா-5:21) என அறிக்கைசெய்து உம்மை வாழ்த்தி வணங்குகிறோம். உமது வார்த்தைகள், எங்கள் மூலம் நிறைவேற எங்களை உம்மைப்போலாக்கும். இயேசுவின் நாமத்தில் ஆமென், பிதாவே.

---

**தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**



**<u>தேன்-துளி வேத வசனக் கதைகள்</u>**

(கதை-166)

# நாம் அளக்கிற அளவின்படி...

சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

மிக ஆழமான கடல்களில் ஒன்றான பசிபிக் பெருங்கடலின் குறிபிட்ட ஒரு பகுதி மாத்திரம் கடுமையான நீரோட்டம் மற்றும் சுழல்கள் நிறைந்ததாகவும் இருந்தது. வழி தவறி அப்பகுதியில் சென்ற அநேக கப்பல்கள் சுழலில் சிக்கி பெரும் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டது. இந்த விபத்துக்களை பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட கப்பல்களை கொள்ளை அடித்தும் சூறையாடியும் பல கொள்ளை கூட்டத்தினர் பிழைப்பு நடத்திவந்தனர். இதனால் நஷ்டமடைந்த கப்பல் அதிபர்கள் இதுபற்று சிந்தித்து இதற்கொரு வழியை கண்டு பிடித்தனர். இதன்படி, நீரோட்டங்கள் நிறைந்த கடற்பகுதியின் ஆழத்தில் ராட்சத தூண்களை நிறுவி அத்தூண்களில் அபாய மணிகளை கட்டி வைத்தனர். கப்பல்கள் நீரோட்ட-பகுதியை நெருங்கும் முன்னரே இந்த மணிகள் அடிக்கத் தொடங்கிவிடுவதால் கப்பல்களின் மாலுமிகள் வெகு-ஜாக்கிரதையாய் கப்பல்களை வேறு திசைக்கு திருப்பிச்சென்று உயிர்ச் சேதத்தையும் பொருட்சேதத்தையும் தவிர்த்து வந்தனர். இதை அறிந்த கடற்கொள்ளையர்கள், அந்த மணிகளின் கயிறுகளை துண்டித்துவிடடனர். இதை அறியாத கப்பல்களின் மாலுமிகள் அபாய மணி அடிக்காததால் மீண்டும் நீரோட்டத்துக்குள் கப்பல்களை செலுத்தி சுழலில் சிக்கி பலத்த சேதத்திற்கு ஆளானார்கள்..

நாட்கள் கடந்தன, பல மாதங்களுக்குப்பின் ஓர் நாள் 120 பேர்களுடன் கடலில் சென்ற கொள்ளைர்கள், தாங்கள் அபாய மணியின் கயிறுகளை அறுத்துவிட்டதை மறந்தவர்களாக தங்களது கப்பலை அபாய பகுதிக்குள் செலுந்திவிட்டனர். அந்தோ! அவர்களுடைய கப்பல் சுழலில் சிக்கியதால் 120 கொள்ளையர்களும் பரிதாபத்துக்குறிய வகையில் மாண்டு போயினர். பேராசை பெருநஷ்டத்தில் முடிந்தது.

பிரியமானவர்களே! நாமும்கூட பிறர் பொருளின்மேல் ஆசைப்பட்டு, பிறருக்கு மனநோவும், பொருள் நஷ்டமும் நேரும்படியான காரியங்களில் ஈடுபடுபட்டு அதன்மூலம் அவர்களுக்கு கஷ்டம், கவலை, கண்ணீர், வேதனை, துன்பங்கள் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்வோ மானால், அந்த கடல்-கொள்ளையர்களைப் போல பெருநஷ்டத்திற்கு உள்ளாவோம். எனவே, தீமையான பொருளாசையை விட்டு விலகுவோம். இயேசு சுவாமி விரும்புகிற மேன்மையான காரியங்களை செய்து அவர் தரும் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.. வேதம் கூறுகிறது..

பொருளாசையை வெறுப்போர் தீர்க்காயுசை பெறுவர். நீதி-28:16

பொருளாசையினால் பிறருக்கு இடுக்கண் செய்யாதே. எசே-22:12

நீங்கள் பொருளாசையில் பழகின இருதயமுடையவர்களாய் இருக்கக்கூடாது. 2பேது-2:14

---

**<u>M.AZARIAH GNANADOSS M.A; M.ED</u>**

**EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900**

==========================================================================

இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-7 பகுதி-2 எப்பிசோடு-32

**கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்**



## 7. ரோம் மற்றும் தாமஸ் கிறிஸ்தவர்கள்

## 2. சிரிய ஆயர்கள் மற்றும் பிற ஆயர்கள்

கி.பி.1543ம் ஆண்டு தாமஸ் கிறிஸ்தவர்களின் அமைப்பான 'செர்ரா'வின் தீவிர ஈடுபாட்டிலிருந்து விலகிய மார்-ஜேக்கப், கொச்சியிலிருந்த செயின்ட் ஆண்டனியின் பிரான்சிஸ்கன் துறவு இல்லத்தில குடியேறினார். அந்த கான்வென்ட்டின் துறவிகளுடன் நட்பு சிறப்பானதாக இல்லை; எனினும் அவர் அனைவராலும் மதிக்கப்பட்டார்.

26 ஜனவரி 1549ல் போர்;ச்சுகல் ராஜாவுக்கு சேவியர் எழுதிய கடிதத்தில், மார் ஜேக்கப்-க்கு சிறப்பு சலுகை காட்டும்படி வலியுறுத்துகிறார். அதில், '45 ஆண்டு களாக ஆர்மீனியாவைச் சேர்ந்த அபுனா ஜேக்கப் என்ற பிஷப் இங்கு கடவுளுக்கு சேவை செய்கிறார்; அவர் மிகவும் வயதான மனிதர், நல்லொழுக்கம் மிக்கவர், அதே சமயம் உங்களின் உயர் அதிகாரங்களால் விரும்பப்படாதவர். அவர் தாமஸ் கிறிஸ்தவர்களிடையே அதிகம் பணியாற்றி வருகிறார். தம் வயதான காலத்தில் அவர் நமது புனிதத்தின் பயன்பாடுகளுக்கு மிகவும் கீழ்ப்படிந்துள்ளார். போர்ச்சுக்கீசியர், தரமான மிளகாயை நியாயமான விலையில் வாங்க அவர் உதவியுள்ளார்; இதற்காக அவர் போதுமான வெகுமதியைப் பெறவில்லை. இப்போதும் வயதான காலத்தில் அவருக்கு தற்காலிக உதவி தேவை. பாசத்தை வெளிப்படுத்தும் வகையில் அவருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். மன்னரால் கௌரவமாக நடத்தப்படுவதை எண்ணி அவர் மகிழ்ச்சி அடைவார். உங்கள் பெருந்தன்மை அவரை மகிழ்விக்கட்டும்' என எழுதுகிறார்.

ஞானஸ்நானத்திற்கு கட்டணம் வசூலிக்கும் கொடுங்கோன்மைக்கு மார்-ஜேக்கப் முற்றுப்புள்ளி வைத்தார். சிரியாக் முறையில் குர்பானாவைக் (திருவிருந்து) கொண்டாடும் வாய்ப்புகள் அதிகம் கிடைத்தாலும், லத்தீன் ஆராதனையில் கலந்து கொண்டார், சில லத்தீன் நடைமுறைகளில் அவருக்குப் விருப்பம் உண்டு, ஆயினும் அவற்றை நடைமுறைப் படுத்தவில்லை. மார் ஜேக்கப் தனது மரணப் படுக்கையில் தம் நண்பரான பெரோ செக்வேராவுக்கு தாமஸ் கிறிஸ்தவர்களின் சிறப்பு உரிமைகளைப் பதிவு செய்யும் செப்புத் தகடு மானியம் பெற்றுத் தரும்படி கேட்டது மனதைத் தொடும் ஒரு நிகழ்வாகும்.

கி.பி.4ம் நூற்றாண்டு முதல் ரோம ஆயர்கள் முழு கிறிஸ்தவ உலகத்தின் மீதும் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டத் தொடங்கினர். கி.பி.1415ல் புளோரன்ஸ் பேரவையில் இருந்ததைப் போல தங்களை ரோமுடன் இணைப்பது சில கிழக்கு பிஷப்களுக்கு வசதியாக இருந்தது. இது

கிழக்கு மற்றும் மேற்கு இடையே பிரிவினையை அதிகரித்தது மட்டுமன்றி கிழக்கில் மேற்கத்திய எதிர்வினையையும், கிழக்கத்திய திருச்சபையில் பல சர்ச்சைகளையும் உண்டாக்கிற்று. ரோம அதிகாரிகளின் கடின மனப்பான்மை இந்திய கிறிஸ்தவர்கள் அவர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பு உணர்ச்சியை மேலும் அதிகரித்தது. கிறிஸ்தவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங் களை மறுப்பது அவர்கள் வழக்கமாயிற்று. வரலாற்றில் நவீன காலம் தொடங்கும்போது, அந்தியோகியா நியமித்த பிஷப்கள், முதல் பீட்டரின் வாரிசுகளாகவே அங்கீகரிக்கப்பட்டனர்;.

அந்தியோகியாவின் ஜோராஸ்ட்ரியன் பார்வையில்: ஒடுக்குமுறை மற்றும் தகவல் தொடர்பு சிரமங்கள் மத்தியில் வாழும் செலூசியாவின் டியார்பெகிர் கத்தோலிக்கர்களுக்கு மெசபடோமியா வில்; சுதந்திரம் வழங்கப்பட்டது. இதனால் பெருநகரங்களுக்கும் தொலைதூர பகுதிகளுக்கும் ஆயர்களை நியமிக்கும் உரிமை தங்களுக்கு உள்ளது என கிழக்கத்திய திருச்சபையினர் கூறினர். சந்தேகத்திற்கு இடமின்றி இது இந்தியாவையும் உள்ளடக்கியதுதான்.

கி.பி.1552ம் ஆண்டு கத்தோலிக்கஸ் சைமன்-பார்-மாமா-7ன் மரணத்திற்குப் பின் ரப்பன் ஹார்மிஸ்ட்டின், துறவு மடத்தின் மடாதிபதியாக ஜான் சைமன் என்ற துறவி கத்தோலிக்கஸ்-ஆக தேர்ந்தெடுக்கப்பட்டு 'சைமன் சுலகா' என்ற பெயரைப் பெற்றார். இது அனைத்து ஆயர்களையும் திருப்திப்படுத்தவில்லை, ஏனெனில் மடாதிபதி கத்தோலிக்கஸ்-ன் உறவினராக இருக்க வேண்டும் என்பது நீண்ட காலமாக தொடரும் வழக்கம். ஜான் சைமன், பார்-மாமாவின் உறவினர் அல்லாததால், பல ஆயர்கள் சேர்ந்து, சைமன்-பார் மாமாவின் மருமகனான சைமன்-பார்-டென்ஹாவை மடாதிபதியாக தேர்ந்தெடுத்தனர். தனது போட்டியாளருக்கு எதிராக ரோம்-இன் ஆதரவைப் பெற, சுலகா நீண்ட பயணத்தை மேற்கொண்டார். அவர் ரோமின் ஆதரவைப் பெற்றுத் திரும்பியதும், டென்ஹா தரப்பினர் சுலகாவுக்கு எதிராக துருக்கியரின் பகையைத் தூண்டினர். சுலகா நீண்ட காலம் பதவியிலிருக்கவில்லை; அவர் கி.பி.1555ல் படுகொலை செய்யப்பட்டார். பின்னர் ரோம ஆதரவாளர்கள் எபெட் ஜேசுவை மடாதிபதியாக தேர்ந்தெடுத்தனர். தனது பரந்த பொறுப்புகளை அறிந்த எபேட் ஜேசு, சைமன் சுலகாவின் சகோதரர் ஜோசப்புக்கு 'மார் ஜோசப்' என்ற பட்டம் அளித்தார். பின்னர் மார் ஜோசப்-ஐயும், மார் எலியாஸ் என்பவரையும் ஆயர்களாக நியமித்து அவர்களை டொமினிகன் பிஷப் ஆம்ப்ரோஸ் புட்டிகெக் உடன் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். இவர்கள் மூவரும் கி.பி.1556ம் ஆண்டு நவம்பர் மாதம் கோவாவிற்கு வந்தார்கள்.

18 மாதங்களில், இவர்கள் மூவரும் 'செர்ரா'விற்கு சிறிதளவே தடைகளை ஏற்படுத்த முடிந்தது. பின்னர், புட்டிகெக் கொச்சியில் இறந்தார். மார் எலியாஸ் மெசபடோமியாவுக்குத் திரும்பினார். பிஷப் ஜோசப் தனித்து விடப்பட்டார். இக்காலத்தில் போர்த்துகீசியர், தடையின்றி, தேவாலயங் களுக்குச் சேவை செய்தனர்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்.......

---

**AUTHOR: DR.MRS.SALOMI MANOHAR M.A; M.PHIL; P.HD ASSISTANT PROFESSOR (RTD), (POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA**

======================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் மார்ச் 2025

### ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்

நாள்: 14-03-2025 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்

நாள்: 21-03-2025 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்

நாள்: 28-03-2025 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி "தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்தி ருக்க" ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

## DETAILS ABOUT US

### CONTACT DETAILS:

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

### BANK DETAILS:

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

### UPI DETAILS:

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

# செய்தித்துளிகள் மார்ச் 2025

1. சீனா, நெதர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாட்டவர்கள் ஆஸ்திரேலியாவில் வீடுகளை வாங்கி குவித்துவந்த நிலையில், ஆஸ்திரேலியாவில் வெளிநாட்டினர் வீடு வாங்க ஆஸ்திரேலிய அரசு தற்காலிக தடை விதித்துள்ளது.

2. இந்தியாவில் ஒரே மாதத்தில் (ஆகஸ்டு-2024), 80 லட்சம் வாட்ஸ்அப் கணக்குகள் முடக்கம். சேவை-விதி-மீறல், சட்ட விரோத செயல்பாடுகள் போன்றவற்றைக் காரணம் காட்டி, வாட்ஸ்அப்| பின் தாய் நிறுவனமான ~மெட்டா| நடவடிக்கை.

3. தமிழ்நாடு முழுதும் வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் ஆளில்லாமல் துல்லியமாக மின்-கணக்கெடுக்கும் 3-கோடி ஸ்மார்ட் மீட்டர்கள் நிறுவுவதற்கு டெண்டர் விடும்பணியை தொடங்கி உள்ளதாக தமிழ்நாடு மின்சார வாரியம் தகவல்.

4. மெட்ரோ-ரயில், மின்சார-ரெயில், பறக்கும்-ரயில் ஆகிய தடங்கள் சந்திக்கும் பரங்கிமலை ரயில் நிலையத்தை ரூ.14.15 கோடி செலவில் சர்வதேச தரத்தில் மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டதாக தென்னக ரயில்வே அறிவிப்பு.

5. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்தும் உலக டேபிள்டென்னிஸ் நட்சத்திர போட்டியாளர் போட்டி வரும் மார்ச் 25முதல் 30வரை சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

==========================================================================================

# தபசு காலம் 2025

**LENT SEASON 2025 GREETINGS**

அன்பான இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர் கள், வலைதளப் பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்து திருச்சபை இறை மக்கள், தபால்-துறை மற்றும் அச்சகத்து நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் இந்த ஆண்டு தபசு காலம் ஆசீர்வாதமாக அமைய அன்புடன் வாழ்த்துகிறோம்..

## BLESSED

## LENT SEASON - 2025

## இரட்சிப்பு

### ஊழிய-குடும்பத்தார்